பெரிதாகக் கருதி அயராது அரும்பணியாற்றி நல்ல பல சிறப்புகளை விட்டுச் சென்ற முன்னோர்கள் வழிநின்று மக்களாட்சி முறையில் மாண்புகளைக் காத்து, நல்லாட்சி புரிந்து வரும் என் தலைவர் கலைஞர் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) சாமானியனான என்னை இச்சட்டமன்றத்தில் பேரவைத் தலைவராக பணியாற்ற வாய்ப்பளித்து, எனக்குப் பெருமை அளித்தது எனக்கு ஒரு பெரும் பேறு என்றே கருதுகிறேன். அதற்காக என்னுடைய கோடானுகோடி நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். இம்மாமன்றத்தில் பல அத்தியாயங்கள், புரட்சிகரமான அத்தியாயங்கள் நாட்டின் முன்னேற்றப் பாதையில் செலுத்துகின்ற அத்தியாயங்கள் பல நடந்திருக்கின்றன. அதற்கெல்லாம் மேலாக நமது தலைவர், பொன்விழா நாயகர், அண்ணாவின் இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில் அடித்தள மக்களின் சுயதேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் எத்தனையோ திட்டங்களை நிறைவேற்றியுள்ளார். இன்னும் பல்வேறு சாதனைகளை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பிலே பவள விழா காண வேண்டும், அவர் புகழ் வாழ வேண்டுமென்று உங்கள் அனைவரின் சார்பிலும் என் சார்பிலும் வாழ்த்துகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(உ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேரவை விதி 25(1)-ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2010 ஜனவரி 11] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-34 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

40. பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் நிறுவனத்தால் வழங்கப்படும் பொது குழும பயன்பாட்டு செல்லிடத் தொலைபேசி சேவையினை தமிழ்நாடு வனத் துறை பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கையிட்டது குறித்து நிதித்(சம்பளங்கள்) துறையின் 17-7-2009 ஆம் நாளிட்ட 302 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

41. இந்திய தேசிய கலை மற்றும் பாரம்பரிய பண்பாட்டு நிறுவனத்தை தரங்கம்பாடி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கு, நெறிப்படுத்துவதற்கு மற்றும் மேற்பார்வையிடுவதற்கு திட்ட ஆலோசகராக நியமித்து அறிவிக்கையிட்டது குறித்து நிதித்(சம்பளங்கள்) துறையின் 17-7-2009 ஆம் நாளிட்ட 303 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

42. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து